**நவம்பர் – 04**

# TNPSC துளிகள்

- இந்தியப் பிரதமர் புது டெல்லியில் நடைபெற்ற ஆரிய சமாஜத்தின் 150வது ஆண்டு நிறைவையும், மகரிஷி தயானந்த சரஸ்வதி அவர்களின் இருநூறாவது ஆண்டு விழாவையும் குறிக்கும் வகையிலான சர்வதேச ஆர்ய மகாசம்மேளனம் 2025 நிகழ்வில் உரையாற்றினார்.
- சீனா தனது டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கான ஷென்சோ-21 பயணத்திற்காக நாட்டின் இளம் விண்வெளி வீரர் (32) மற்றும் கொறித்துண்ணிகள் தொடர்பான சீனாவின் முதல் விண்வெளி சுற்றுப்பாதை சார் உயிரியல் பரிசோதனையைக் குறிக்கின்ற நான்கு ஆய்வகப் பயன்பாட்டு எலிகள் உட்பட மூன்று பேர் கொண்ட குழுவுடன் கூடிய விண்கலத்தினை வெற்றிகரமாக விண்ணில் ஏவி உள்ளது.
- மகாராஷ்டிரா மாநில அரசானது, தொழுநோயை அறிவிக்கத்தக்க ஒரு நோயாக அறிவித்து, அதன் பரவலைத் தடுப்பதற்காக அனைத்து சுகாதார வழங்குநர்களும் இரண்டு வாரங்களுக்குள் அதன் பாதிப்புகள் குறித்தப் புகாரளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.
    - இந்த நடவடிக்கையானது, "2027 ஆம் ஆண்டிற்குள் தொழுநோய் பாதிப்பு இல்லாத மகாராஷ்டிரா என்ற நிலையை" அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கேரளா மாநிலமானது, தீவிர வறுமையை ஒழித்த முதல் இந்திய மாநிலமாக ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.
    - கேரளாவின் மாநில உருவாக்க தினமான (கேரள பிரவி), 2025 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மாநிலச் சட்டமன்றத்தில் முதல்வர் இந்தச் சாதனையை அறிவித்தார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 1,040வது சதய விழா – இராஜராஜ சோழன்




- பேரரசர் முதலாம் இராஜராஜ சோழனின் (கி.பி 947-கி.பி 1014) 1,040வது சதய விழா

அல்லது பிறந்த நாளைக் குறிக்கும் இரண்டு நாட்கள் அளவிலான விழாவானது தஞ்சாவூரில் உள்ள பெருவுடையார் கோவிலில் நடைபெற்றது.

- 'ஐப்பசி' மாதத்தின் சதய நட்சத்திரத்தில் வருகின்ற முதலாம் இராஜ ராஜனின் பிறந்த நாள் ஆனது சதய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.
- கி.பி 985 முதல் 1014 வரை அப்பகுதியை ஆட்சி செய்த அவர், அவரது இராணுவப் பலத்திற்காக புகழ் பெற்றவர் ஆவார்.
- அவர் வடக்கு இலங்கையின் குறிப்பிட்ட பகுதி, சேர நாடு மற்றும் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தார்.
- மேலும், அவர் லட்சத்தீவுகள், திலதுன்மதுலு பவளப்பாறைத் திட்டு மற்றும் இந்தியப் பெருங்கடலில் உள்ள மாலத்தீவின் வடக்குத் தீவுகளில் ஒரு பகுதியை வாங்கினார்.
- முதலாம் இராஜராஜ சோழன், கி.பி 1010 ஆம் ஆண்டில், தஞ்சாவூரில் பிரமாண்டமான பிரகதீஸ்வரர் கோவிலை (இராஜராஜேஸ்வரம் கோவில்) கட்டமைத்தார்.

# தேசியச் செய்திகள்

## 10 முன்னணி அசுத்தமான நகரங்கள் 2025

- இந்தியாவின் அசுத்தமான நகரங்களில் மதுரை முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து லூதியானா, சென்னை, ராஞ்சி மற்றும் பெங்களூரு ஆகியவை உள்ளன.
- தூய்மைத் தரவரிசையில் மோசமாகச் செயல்படும் பிற நகரங்களில் தன்பாத் (6வது), ஃபரிதாபாத் (7வது), கிரேட்டர் மும்பை (8வது), ஸ்ரீநகர் (9வது) மற்றும் டெல்லி (10வது) ஆகியவை அடங்கும்.


| Rank | City | Score |
|---|---|---|
| 1. | Madurai | 4823 |
| 2. | Ludhiana | 5272 |
| 3. | Chennai | 6822 |
| 4. | Ranchi | 6835 |
| 5. | Bengaluru | 6842 |
| 6. | Dhanbad | 7196 |
| 7. | Faridabad | 7329 |
| 8. | Greater Mumbai | 7419 |
| 9. | Srinagar | 7488 |
| 10. | Delhi | 7920 |

## K.S. சிவப்பா மற்றும் K. நீலம்மா இடையிலான வழக்கு 2025

- வழக்குப் பதிவுகள் இல்லாமல் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களால் செய்யப்பட்ட எந்தவொரு சொத்து விற்பனை அல்லது பரிமாற்றத்தையும் எதிர்த்து 18 வயது நிரம்பிய பிறகு சிறார்கள் வழக்கு தொடுக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- வயது வந்தவர்கள் தாங்களே சொத்தை விற்பது அல்லது பரிமாற்றுவது போன்ற தெளிவான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் அத்தகையப் பரிமாற்றங்களை

ரத்து செய்யலாம் என்றும் நீதிமன்றம் கூறியது.

- K.S. சிவப்பா மற்றும் K. நீலம்மா இடையிலான வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- 1956 ஆம் ஆண்டு இந்து சிறுபான்மையினர் மற்றும் பாதுகாவலர் சட்டத்தின்படி, இயற்கையான காப்பாளர் அந்த சிறாரின் நலனுக்காக செயல்பட வேண்டும்.
- நீதிமன்ற அனுமதியின்றி காப்பாளர்கள் சிறாரின் அசையாச் சொத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ முடியாது.
- கால வரையறைச் சட்டம், 1963 ஆனது, நிறை/உரிமை வயதை அடைந்த 3 ஆண்டுகளுக்குப் பிறகு, அத்தகைய சொத்துப் பரிமாற்றத்தை எதிர்த்து வழக்குத் தொடுக்கவோ அல்லது ஒதுக்கி வைக்கவோ ஒரு நபருக்கு வாய்ப்பளிக்கிறது.
- அப்துல் ரஹ்மான் மற்றும் சுக்தயாள் சிங் 1905 என்ற வழக்கில் வழங்கப் பட்ட ஒரு முன்னுதாரணத்தை இந்தத் தீர்ப்பு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.




## NeVA தொடர்பான 3வது தேசிய மாநாடு




- பாராளுமன்ற விவகார அமைச்சகம் ஆனது தேசிய இணைய-விதான் செயலி (NeVA) குறித்த 3வது தேசிய மாநாட்டை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் உள்ள 44 பொது சேவைத் திட்டப் பணி வழி திட்டங்களில் (MMPs) NeVA ஒன்றாகும்.
- அனைத்து மாநிலச் சட்டமன்றங்களையும் காகிதமில்லா மற்றும் "ஒரு நாடு, ஒரு செயலி" என்ற கொள்கையின் கீழ் ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த மாநாடு ஆனது NeVA செயலியின் முன்னேற்றம், பகிரப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் விரைவான செயல்படுத்தலுக்கான தீர்வுகளைப் பற்றி

விவாதித்தது.

- டிஜிட்டல் இந்தியாவை ஆதரிக்கின்ற இந்த முன்னெடுப்பு, முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப் பட்ட சட்ட அமைப்புகள் மூலம் நல்லாட்சியை ஊக்குவிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## 7வது இந்தோ-பசிபிக் பிராந்தியப் பேச்சுவார்த்தை




- இந்தியக் கடற்படையானது 7வது இந்தோ-பசிபிக் பிராந்தியப் பேச்சுவார்த்தையினை (IPRD-2025) புது டெல்லியில் நடத்தியது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, 'Promoting Holistic Maritime Security and Growth: Regional Capacity-Building and Capability-Enhancement' என்பதாகும்.
- இந்த நிகழ்வானது, கடற்படையின் அறிவுத் திறன் பங்குதாரரான தேசிய கடல்சார் அறக்கட்டளையுடன் (NMF) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- IPRD 2025 ஆனது, MAHASAGAR (பிராந்தியங்கள் முழுவதும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பர மற்றும் முழுமையான முன்னேற்றம்) என்ற பரந்த கடல்சார் தொலைநோக்கு கொள்கையின் கீழ் நடைபெற்றது.
- IPRD 2025, பலதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், பிராந்திய உறுதித்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் மீள்தன்மை மற்றும் வளமான இந்தோ-பசிபிக் என்ற பகிரப்பட்ட நோக்கத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## பாடிதெல்புசா - புதிய நன்னீர் வாழ் நண்டு இனம்

- அறிவியலாளர்கள், சேலம் மாவட்டத்தின் ஏற்காட்டில் உள்ள சேர்வராயன் மலைகளில் நன்னீர் வாழ் நண்டுகளின் ஒரு புதிய பேரினத்தையும், புதிய இனங்களையும் அடையாளம் கண்டுள்ளனர்.
- புதிதாக விவரிக்கப்பட்ட பேரினம் பாடிதெல்புசா மற்றும் அதன் இனம் பாடிதெல்புசா ஏற்காடென்சிஸ் என்பதாகும்.
- நன்னீர் வாழ் நண்டுகள் பற்றிய ஆய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றிய பிரபல இந்திய வகைப் பிரிப்பாளரான சமீர் குமார் பாடியின் நினைவாக இந்த

இனத்திற்கு இப்பெயரிடப் பட்டுள்ளது.


- இது தென்னிந்தியாவில் காணப்படும் ஓர் இனமான டிராவன்கோரியானா ஷிர்னெரே என்ற இனத்திலிருந்து 9.66% மரபணு வேறுபாட்டைக் கொண்டுள்ளது.
- இந்த நண்டினத்தின் பரிணாம வளர்ச்சியானது, அருகிலுள்ள மலைத் தொடர்ச்சிகளில் இருந்து ஆழமான பள்ளத்தாக்குகள் மற்றும் காவிரி நதி அமைப்பால் பிரிக்கப்பட்ட சேர்வராயன் மலைகளின் நிலப்பரப்பு தனிமைப்படுத்தலால் வடிவமைக்கப் பட்டு இருக்கலாம்.
- இந்த இயற்கைத் தடைகள் ஆனது மரபணு ஓட்டத்தைக் கட்டுப்படுத்தி, இந்த நண்டுகளின் எண்ணிக்கை காலப்போக்கில் சுயாதீனமாக உருவாக வழி வகுத்தது.
- இந்த கண்டுபிடிப்புடன், இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நன்னீர் வாழ் நண்டு இனங்களின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளது, இது கெகார்சினுசிடே குடும்பத்தின் கீழ் உள்ள 31 வகைகளைச் சேர்ந்தவையாகும்.
- உலகில் அறியப்பட்ட நன்னீர் வாழ் நண்டு இனங்களில் சுமார் 10% இந்தியாவில் காணப் படுகின்றது என்ற நிலையில் அவற்றில் பல சிறிய, உள்ளூர்மயமாக்கப்பட்ட வாழ்விடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.




## நௌராதேஹி சரணாலயத்தில் சிவிங்கிப் புலிகள் மறு அறிமுகம்

- மத்தியப் பிரதேசத்தின் நௌராதேஹி வனவிலங்கு சரணாலயம் ஆனது, குனோ தேசியப் பூங்கா மற்றும் காந்தி சாகர் சரணாலயத்திற்கு அடுத்தபடியாக, அந்த மாநிலத்தில் சிவிங்கிப் புலிகளுக்கான மூன்றாவது காப்பகமாக மாற உள்ளது.
- நமீபியாவிலிருந்து பெறப்பட்ட சிவிங்கிப் புலிகள் நௌராதேஹியில் விடுவிக்கப் படும்.
- குனோ மற்றும் காந்தி சாகரில் பதிவான புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் தொடர்ச்சியான மேலாண்மையைத் தொடர்ந்து நௌராதேஹி தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இந்த நடவடிக்கையானது அவற்றின் வாழ்விடங்களைப் பல்வகைப்படுத்தும், குனோ தேசியப் பூங்கா மீதான அழுத்தத்தைக் குறைக்கும் மற்றும் சம்பல்-விந்தியன் நிலப் பரப்பில் ஒரு மாபெரும் எண்ணிக்கையை உருவாக்கும்.

- நௌராதேஹி வனவிலங்கு சரணாலயம் ஆனது 1,197 சதுர கி.மீ பரப்பளவில் பரவி உள்ள இந்தியாவின் மிகப்பெரிய சரணாலயங்களில் ஒன்றாகும்.
- யமுனா மற்றும் நர்மதா நதிப் படுகைகளுக்கு நடுவே இந்தச் சரணாலயம் அமைந்து உள்ளது மற்றும் பாம்னேர், கோப்ரா மற்றும் பியர்மா போன்ற முக்கிய ஆறுகள் அதன் வழியாகப் பாய்கின்றன.
- வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக 1952 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆசிய சிவிங்கிப் புலிகள் அழிந்துவிட்டன.
- இந்திய அரசானது, நமீபியாவிலிருந்து ஆப்பிரிக்க சிவிங்கிப் புலிகளை மீண்டும் அறிமுகப் படுத்துவதற்காக சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தினைத் தொடங்கி, குனோ தேசியப் பூங்காவிலும் (2022) பின்னர் காந்தி சாகர் சரணாலயத்திலும் (2024) சிவிங்கிப் புலிகளை அறிமுகப்படுத்தியது.
- தற்போது மூன்றாவது வளங்காப்புத் தளமாகச் செயல்படும் நௌராதேஹி மத்திய இந்தியாவில் இந்த இனங்களின் விரிவாக்கம், மரபணு பல்வகைப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு மறுசீரமைப்பை உறுதி செய்கிறது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### UNEP அமைப்பின் ஏற்பு இடைவெளி அறிக்கை 2025


- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது (UNEP) "Running on Empty" என்ற தலைப்பிலான அதன் 2025 ஆம் ஆண்டிற்கான ஏற்பு/தகவமைப்பு இடைவெளி அறிக்கையை (AGR) வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது வளர்ந்து வரும் நாடுகளில் தேவைப்படும் ஏற்பு நிதிக்கான செலவு குறித்த தகவலை அளிக்கிறது என்பதோடு இது மாதிரியாக கணிக்கப்பட்ட செலவுகளின் அடிப்படையில் 2035 ஆம் ஆண்டில் ஆண்டிற்கு 310 பில்லியன் டாலராக கணிக்கப் பட்டு உள்ளது.
- தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் தேசிய ஏற்புத் திட்டங்களில் வெளிப்படுத்தப்பட்ட தேவைகள், எண்ணிக்கை ஆண்டிற்கு 365 பில்லியன் டாலராக உயர்கிறது.

- ஆனால், முந்தைய ஆண்டில் இருந்த 28 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த வளர்ந்து வரும் நாடுகளுக்கான சர்வதேச பொது தகவமைப்பு நிதி வழங்கீடுகள் ஆனது 2023 ஆம் ஆண்டில், 26 பில்லியன் அமெரிக்க டாலர்களாக குறைந்தன.
- இது வளர்ந்து வரும் நாடுகளில் தகவமைப்பு நிதித் தேவைகளை தற்போதைய நிதி வழங்கலை விட 12 முதல் 14 மடங்கு அதிகமாக உயர்த்துகிறது.
- தற்போதைய நிதிப் போக்குகள் தொடர்ந்தால், 2025 ஆம் ஆண்டிற்குள் சர்வதேசப் பொதுத் தகவமைப்பு நிதியை 2019 ஆம் ஆண்டிலிருந்த நிலைகளிலிருந்து இரட்டிப்பாக்கும் கிளாஸ்கோ பருவநிலை ஒப்பந்த இலக்கை அடைய முடியாது.
- இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்கை நடவடிக்கை மற்றும் கலப்பு நிதித் தீர்வுகளால் ஆதரிக்கப் பட்டால் ஆண்டிற்கு சுமார் 50 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கும் திறனுடன் கூடிய தனியார் துறையானது இன்னும் அதிகமாகப் பங்களிக்க முடியும்.




# மாநிலச் செய்திகள்

## ‘அறுசுவை உணவியல் நகரம்’ - லக்னோ




- உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு, உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்டில்

யுனெஸ்கோ பொது மாநாட்டின் 43வது அமர்வு நடைபெற்றது.

- இந்த நிகழ்வில் யுனெஸ்கோ அமைப்பானது லக்னோவை 'ஆக்கப்பூர்வமான அறுசுவை உணவியல் நகரம்' என்று அறிவித்தது.
- இந்த உலக அங்கீகாரம் ஆனது அந்த நகரத்தின் நூற்றாண்டு காலப் பழமையான ஆவாதி உணவு வகைகள், உயிர்ப்புமிக்க உணவு மரபுகள் மற்றும் உள்ளார்ந்த கலாச்சாரப் பாரம்பரியத்தை கொண்டாடுகிறது.
- இந்த அங்கீகாரம் கலாச்சாரம் மற்றும் உணவு வகைகள் மூலம் அதன் கலாச்சார மற்றும் பொருளாதார (soft power) ஆற்றலை வெளிப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளுடன் ஒன்றி, நிலையான சுற்றுலாவை ஊக்குவிக்கும், பாரம்பரிய சமையல் குறிப்புகளைப் பாதுகாக்கும் என்பதோடு மேலும் உள்ளூர் கைவினைஞர்கள் மற்றும் சமையல் வல்லுநர்களையும் ஆதரிக்கும்.
- 2025 ஆம் ஆண்டில் லக்னோ சேர்க்கப்பட்டதன் மூலம், இந்த வலையமைப்பில் உள்ள இந்திய நகரங்களின் எண்ணிக்கை மொத்தம் ஒன்பது ஆக உயர்கிறது.
- ஐதராபாத், அல்-மதினா அல்-முனாவ்வரா (சவுதி அரேபியா), கெலோவ்னா (கனடா), குவான்சோ (சீனா) மற்றும் ஜராகோசா (ஸ்பெயின்) போன்றவற்றுடன் இணைந்து, உலகளவில் உள்ள 70 அறுசுவை உணவியலில் படைப்பாற்றல் மிக்க நகரங்களில் ஒன்றாக லக்னோ இடம் பிடித்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கேந்திரிய கிரிஹ்மந்திரி தக்சதா பதக் விருது 2025




- 2025 ஆம் ஆண்டிற்கான 'கேந்திரிய கிரிஹ்மந்திரி தக்சதா பதக்' விருதுக்குத் தகுதி பெற்ற 1,466 பணியாளர்களின் பெயர்களை மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) அறிவித்துள்ளது.
- இது இந்தியா முழுவதும் காவல்துறை மற்றும் பிற ஆயுதப்படைகள், பாதுகாப்பு அமைப்பு மற்றும் தடயவியல் அறிவியல் அமைப்புகளின் (மத்திய / மாநில / ஒன்றியப் பிரதேசங்கள்) உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இது 2024 ஆம் ஆண்டில் உள்துறை அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.
- இந்த விருதானது, நாடு முழுவதும் உள்ள அதிகாரிகளின் தொழில்முறைத் தரங்களை ஊக்குவிப்பதையும் அவர்களின் மன உறுதியை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முன்னர் இருந்த, 4 MHA விருதுகளை இணைத்து உருவாக்கப்பட்டது -

- சிறப்புச் செயல்பாட்டுப் பதக்கம்,
- புலனாய்வில் சிறந்து விளங்குவதற்கான பதக்கம்,
- மகத்தான நுண்ணறிவுத் திறன் பதக்கம், மற்றும்
- சிறந்த சேவைக்கான மத்திய உள்துறை அமைச்சரின் விருது

# விளையாட்டுச் செய்திகள்

## ரோஹன் போபண்ணா ஓய்வு




- இரண்டு முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டம் பெற்ற இந்தியாவின் மிகவும் திறமையான டென்னிஸ் வீரர் ரோஹன் போபண்ணா சமீபத்தில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 2017 ஆம் ஆண்டில், பிரெஞ்சு ஓபன் கலப்பு இரட்டையர் பிரிவில் கனடாவைச் சேர்ந்த கேப்ரியலா டப்ரோவ்ஸ்கியுடன் விளையாடி, தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.
- ATP போட்டிகளில், ஆறு மாஸ்டர்ஸ் 1000 வெற்றிகள் உட்பட போபண்ணா ஒட்டு மொத்தமாக 26 பட்டங்களை வென்றுள்ளார்.
- அவர் 2024 ஆம் ஆண்டில் ஆடவர் இரட்டையர் போட்டியில் உலகின் முன்னணி வீரர் என்ற தரவரிசையையும் பெற்றார்.

## FIDE உலக சதுரங்கக் கோப்பை 2025

- 2025 ஆம் ஆண்டு FIDE உலக சதுரங்கக் கோப்பை போட்டியானது கோவாவில் தொடங்கியது.
- இப்போட்டியில் ஐந்து முறை உலக சாம்பியனும் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டருமான விஸ்வநாதன் ஆனந்த் அவர்களைக் கௌரவிக்கும் விதமாக பெயரிடப் பட்ட விஸ்வநாதன் ஆனந்த் கோப்பை வெளியிடப்பட்டது.
- மயில் வடிவமைப்பு (இந்தியாவின் தேசியப் பறவை) இடம் பெற்றிருந்த இந்தக் கோப்பை "இந்தியாவின் சதுரங்கப் புரட்சியின் சின்னம்" என்று விவரிக்கப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா FIDE உலகக் கோப்பை போட்டியை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

- ஐதராபாத்தில் நடைபெற்ற கடைசி போட்டியின் போது, ஆனந்த் ருஸ்தம் காசிம்ட்ஜானோவை வீழ்த்தி வெற்றிப் பெற்றார்.




# முக்கிய தினங்கள்

## உலக நகரங்கள் தினம் 2025 - அக்டோபர் 31

- இத்தினமானது, உலகளாவிய நகரமயமாக்கல் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நிலையான நகர்ப்புற மேம்பாட்டினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நகர்ப்புறப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதிலும் புதிய நகர்ப்புறச் செயல்பாட்டு நிரலை அடைவதிலும் சர்வதேசச் சமூகத்தை ஈடுபடுத்துவதற்கான Urban October எனப்படும் UN-Habitat தலைமையிலான ஒரு மாத கால முன்னெடுப்பின் முடிவையும் இந்த நாள் குறிக்கிறது.
- அனைவரும் நல்லிணக்கத்துடனும் செழிப்புடனும் வாழக் கூடிய உள்ளடக்கிய, மீள்தன்மை மற்றும் நிலையான நகரங்களின் அவசியத்தை இந்த அனுசரிப்பு எடுத்துக் காட்டுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "People-Centred Smart Cities" என்பது ஆகும்.
- இந்த ஆண்டு அனுசரிப்பு ஆனது கொலம்பியாவின் பொகோட்டாவில் நடத்தப்பட்டது.



# இதரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டின் சிறந்த சொல் - 67

- Dictionary.com நிறுவனமானது, பிரபலமான பேச்சுவழக்குப் பயன்பாடு, பொருளற்ற இணையக் கலாச்சாரம் மற்றும் அதிகரித்து வரும் இளையோர் புகழ் ஆகியவற்றை மேற்கோள் காட்டி "67" என்ற எண்ணினை 2025 ஆம் ஆண்டின் சிறந்த சொல்லாக குறிப்பிட்டுள்ளது.
- இந்தச் சொல்லானது, "அறுபத்தேழு" என்று இல்லாமல் "six-seven/ஆறு-ஏழு" என்று உச்சரிக்கப் படுகிறது என்பதோடு இதற்கு எந்தவொரு தெளிவான பொருளும் இல்லை.
- ஆனால் சமூக வலைதளங்கள் மற்றும் விளையாட்டுத் தளங்களில் அதன் பிரபலமான பரவல் அதை ஓர் உணர்ச்சி, ஒரு மகிழ்ச்சிகரமான மனநிலை அல்லது ஒரு பஞ்ச்லைன் என்பதற்கான சுருக்கெழுத்தாக மாற்றியுள்ளது.
- Dictionary.com ஆனது இதை 2025 ஆம் ஆண்டின் "மொழியியல் காலக் காப்பகம்" என்று அழைத்தது.
- "67" என்ற சொல்லானது டிஜிட்டல் ஊடகங்களில் அதிக எண்ணிக்கையில் குறிப்பிடப் பட்டன என்பதோடு 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதன் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆறு மடங்கு அதிகரித்தன.
- முதல் முறையாக ஆண்டின் சிறந்த சொல் ஆனது ஒரு சொல் என்பதை விட ஒரு கருத்தை வரையறுக்க அல்லாமல், ஓர் உணர்வை வெளிப்படுத்தப் பயன்படுத்தப் படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★